தலைப்பு 171 - மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 171 - மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல்

அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்டன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் போது 14 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 59 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் சேமிப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன.	கட்டிடம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானதாக இருந்ததனால் மேம்படுத்துவதற்கு பிரச்சினை உருவாகுதல், அமைச்சு ஆளணியினர் விலகிச் செல்லுதல், 2024 சனவரி 10 ஆந் திகதிய 1/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு இணங்க அத்தியவசியமான நடவடிக்கைகள் மாத்திரம்	நிதிப்பிரமாணம் 50(ii) இற்கு இணங்க மதிப்பீடு முடியுமான அளவிற்கு முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட்டது என்பதற்கான பொறுப்பினை கணக்கீட்டு உத்தியோகத்தர் ஏற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

		மேற்கொள்ளல், செலவுக் கட்டுப்பாடு, பயிற்சி காலப்பகுதிக்குரிய கொடுப்பனவுகள் செய்யப்படாமை, தேர்தல் காலப்பகுதி காணப்படல் ஆகிய காரணங்களால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது.	வேண்டும்.
(ஆ)	வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மிகையாக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக 12 செலவு விடயங்களின் நிதி ஏற்பாடு 14 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரயான விச்சில் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறே 13 செலவு விடயங்களின் நிதி ஏற்பாடு நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ஏனைய செலவு விடயஙிகளுக்கு மாற்றப்பட்டிருந்தும் 13 சதவீதத்திலிருந்து 75 சதவீதம் வரையான வீச்சில் அச்செலவு விடயங்களின் சேமிப்பு காணப்பட்டிருந்தது.	வெளிநாட்டு பயணச் செலவுகளுக்கான தேவைப்பாடு உருவாகியிருக்காமை, சீருடைகளுக்கு தகமையுள்ள உத்தியோகத்தர்கள் குறைவடைதல், ஆதனக் கடன் பெற்றுக்கொள்ளல் குறைவடைதல், 2024 சனவரி 10 ஆந் திகதிய 1/2024 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகளை கட்டுப்படுத்துதல், நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் சேமிப்புக்கள் இடம்பெற்றுள்ளது.	-மேற்படி-
(இ)	செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 52.98 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் நிதி ஏற்பாட்டில் 63 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க தேவைப்பாடின்றி நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	-மேற்படி-
(ஈ)	60 செலவு விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி எற்பாடு நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்டிருந்ததுடன் அந்த செலவு விடயங்களின் சேமிப்பிற்கு 2024 சனவரி 10 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகளை கட்டுப்படுத்தியமை காரணம் என காட்டப்பட்டிருந்தும் மிகை	2024 சனவரி 10 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகளை கட்டுப்படுத்தியதனால் சேமிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.	நிதிபபிரமாணம் 50 இற்கு இணங்க முடியுமான அளவுக்கு சரியாக மதிப்பீட்டினை தயாரிக்க வேண்டியதுடன் செலவுகள் அந்த ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டினை மிகைத்து செல்லுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் திருப்தி கொள்கின்ற

	நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தமை/ நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றுதல் மிகையாக செய்யப்படல் என்பன சேமிப்புக்களுக்கு காரணமாக இருந்தன.		சந்தர்ப்பத்தில் மாத்திரம் நிதிபபிரமாணம் 66 இற்கு இணங்க நிதி ஏற்பாட்டினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்கள், ஓய்வுபெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தர் மற்றும் மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கு உரிய ஆண்டினை மிகைத்த நிலுவைக் கடன் மீதி ரூபா 0.9 மில்லியனாக இருந்தது.	எதிர்வரும் காலங்களில் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	நிலுவைக் கடன் மீதியை உரிய உத்தியோகத்தர்களிட மிருந்து அல்லது பிணையாளர்களிடமிரு ந்து அறவிட வேண்டியதுடன் கடனை அறவீடு செய்வது சம்பந்தமாக பரீட்சிப்புக்களை நடாத்தி பொறுப்புக்களைச் செய்யத் தவறியுள்ள உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபனவிதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
ரூபா 3.76 மில்லியன் பெறுமதியான 14 பொறுப்புக்கள் தொடர்பான விபரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததனால் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	நிதிப்பிரமாணம் 94 இற்கு இணங்க நிதி ஏற்பாட்டினை மிகைத்து கடப்பாடுகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும்.

3.3 முற்பண வழங்குதலும் தீர்த்துவைத்தலும்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	நிதிப்பிரமாணம் 371(5) இற்கு இணங்க உப கட்டுநிதிகள் வழங்கியதன் பின்னர் உரிய செயற்பாட்டினை முடிவு செய்து 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 07 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தமாக 0.2 மில்லியன் உபகட்டுநிதிகளை தீர்த்துவைப்பதற்கு 14 நாட்களிலிருந்து 25 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது.	எதிர்வரும் காலங்களில் தாமதம் ஏற்படுவதனைக் குறைத்து நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக் கு தெரியப்படுத்தப்பட்டுள் ளது.	நிதிபப்பிரமாணம் 371(5) இற்கு இணங்க உப கட்டு நிதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	தொழில் நிலையத்தில் பாலியல் வன்முறையினைக் குறைப்பதற்காக மகளிர் குழுவினால் இலங்கை முதலீட்டுச் சபைக்கு அருகாமையில் மற்றும் வேலைத் தளங்களுக்கு அருகாமையில் செயற்படுகின்ற கைத்தொழில் துறையில் சேவையில் ஈடுபடுகின்ற மகளிரின் வன்முறையினை குறைப்பதனை குறிக்கோளாகக் கொண்டு நிகழ்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் கருதுகோள் பத்திரத்திற்கு அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் கிடைத்திருக்காததுடன் அந்த நிகழ்சசித்திட்டத்திற்கு பங்குபற்றுபவர்களின் அறிவினைப் பரீட்சிப்பதற்காக மதிப்பீட்டு முறைமையும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த நிகழ்சித்திட்டம் 2024 யூன் மாதத்தில் முடிவடைவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் திசெம்பர் மாதம் வரை அமுல்ப்படுத்தப்பட்டு ரூபா 0.4 மில்லியன் செலவு செய்து 07 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.	பதில் வழங்கப்படவில்லை.	நிகழ்சித்திட்டங்களை நடாத்துவதற்காக அமைச்சு செயலாளரின் முன்அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். நிகழ்சித்திட்டத்தின் செயலாற்றலினை உரிய காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2024 திசெம்பர் 23 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்தில் நடைபெற்ற மகளிர் வன்முறையை குறைப்பதனை குறிக்கோளாகக் கொண்டு நடாத்தப்பட்ட புரிந்துணர்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கான வளவாளராக பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் ஒரு	-மேற்படி-	மதிப்பீடு செய்யப்பட்ட செலிவினை மிகைத்து செலவு செய்யாதிருக்க வேண்டியதுடன் எதிர்பார்த்த வளவாளரினை தொடர்புகொண்டு நிகழ்சித்திட்டத்தினை

உத்தியோகத்தரினை தொடர்புபடுத்தியிருக்காததுடன் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூா 0.1 மில்லியனாக இருந்த போதிலும் இந்த நிகழ்சித்திட்டத்திற்கான செலவு ரூபா 0.14 மில்லியனாக இருந்தது.		திட்டமிட்டவாறு அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) தேசிய மகளிர் குழுவின் ஐந்து ஆண்டுகள் தந்திரோபாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் "திருப்திகரமான குடும்ப செயற்திட்டம்" 2021 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பற்ற குடும்பங்களை அடையாளம் காண்பதற்கு 1938 மகளிர் உதவி தொலைபேசி சேவைக்கு 2020 ஆம் ஆண்டில் கிடைத்த அதிக முறைப்பாடுகளின் எண்ணிக்கை அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் கெழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களிலிருந்து அறிக்கையிடப்பட்டிருந்தும் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைத்த குருனாகல் மாவட்டத்தில் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததன் மூலம் குடும்பங்களை தெரிவுசெய்யும் அடிப்படையானது வெளிப்படைத்ததன்மையற்றதாகும்.	குருனாகல் மாவட்ட செயலகம், குருனாகல் மற்றும் பொல்பிதிகம பிரதேச செயலகங்களை உள்ளடக்கும் வகையில் பாதுகாப்பற்ற குடும்பங்களை அடையாளங்காணல் மற்றும் கண்காணிப்பு குழுவினை வலுப்படுத்தி செயற்படுத்துவதன் கீழ் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவுகளை அபிவிருத்தி செய்வதற்காக உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் அந்த பாதுகாப்பற்ற குடும்பங்களுக்கு நிகழ்சித்திட்டங்களை நடாத்துவதற்காக 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க ரூபா 2,901,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டது.	செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக நலன்பெறுனர்களைத் தெரிவு செய்தல் ஒரு முறையான அடிப்படையிலும் எதிர் பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையிலும் இடம்பெறுகின்றது என்பதனை கவனித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	திருப்தியான குடும்பங்கள் செயற்திட்டத்திற்கான முழு நிதி ஏற்பாட்டுப் பணம் ரூபா 2.9 மில்லியனாக இருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலவு செய்யப்பட்ட 2.8 மில்லியன் பணம் திருப்தியான குடும்ப செயற்திட்டத்தினூடாக குடும்பத்தின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துதல், நல்ல பழக்க வழக்கங்களை ஊக்குவித்தல், உளத்திருப்தியினையும் குடும்பத்தின் ஒத்துழைப்பினையும் அதிகரிக்கச் செய்தல் கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து விடுபடச் செய்தல், முதலிய குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக செலவு செய்யப்படாது அக்குறிக்கோள்களுக்குப் புறம்பாக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் கூட்டத் தொடர்களை நடாத்துதல், வளவாளர் படிகளைச் செலுத்துதல், உத்தியோகத்தர் படிகளைச் செலுத்துதல் என்பவற்றிற்காக மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.	குருனாகல் மற்றும் பொல்பிதிகம பிரதேச செயலகங்களினால் மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நடத்தைகளை மாற்றுதல் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டிருந்தும் மேற்கூறிய குறிக்கோள் முறைப்படியாக நிறைவேற்றப்படாததனால் தொடர்ந்தும் இச்செயற்திட்டத்தினை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு முன்னாள் அமைச்சின் செயலாளர் தெரியப்படுத்தியிருந்தார். மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்களது செயலாற்றலினை, அதிகரிக்கச் செய்வதற்காக இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் பல்வேறு தலைப்புக்களின் கீழ் புரிந்துணர்வினை அதிகரிக்கச் செய்வதற்கு நிகழ்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் அடுத்துவரும் நிகழ்சித்திட்டங்களை வழங்கும் போது இவ்வாறான நிலைமை உருவாகுவதனை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பிரதபலன்கள் இலக்கிடப்பட்ட நலன் பெறுனர்களுக்கு கிடைக்கின்றது என்பதனை உறுதிப்படுத்தி செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2021 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஆம் ஆண்டு வரை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திருப்தியான குடும்ப செயற்திட்டம் ஒரு ஆண்டிலேயே முடிவடைந்திருந்ததுடன் எதிர்பார்த்தவாறு கிராமிய பாதுகாப்பற்ற சமூகத்திற்கு பிரதிபலன்கள் கிடைத்திருககவில்லை.	நிகழ்ச்சிதிட்டத்தின் தொடக்க கருதுகோளின் கீழ் கிராமிய சமூகத்திலுள்ள குடும்பங்களின் திருப்தியை அதிகரிப்பதற்காக நேரடியாகவும் போதியளவிலும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்தியிருக்காமை மற்றும் நேரடியாக இலக்கிடப்பட்ட நலன்பெறுனர்களுக்கு பிரதிபலன்கள் கிடைக்காததனால் 2022 திசெம்பர் 30 ஆந் திகதி நிகழ்சித்திட்டம் முடிவு செய்யப்பட்டது.	-மேற்படி-

4.2 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) மீனாய்வாண்டின் போது ''வாழ்க்கைக்கான அர்த்தம் நிகழ்ச்சித்திட்டத்திற்காக'' ரூபா 3.5 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இலக்கிடப்பட்ட நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 60 ஆகும். கணக்காய்வுத் திகதி வரை 40 செயற்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் 08 வாரங்களுக்குள் ஒவ்வொரு செயற்திட்டத்தினதும் செயற்பாடுகள் முடிவு செய்யப்பட வேண்டிய போதிலும் 02 செயற்திட்டங்கள் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும் இச்செயற்திட்டத்தினை நாடு முழுவதிலுமுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் அமுல்ப்படுத்த வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதி வரை ரூபா 3.2 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் 25 மாவட்டங்களில் 10 மாவட்டங்களில் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டிற்காக 64 செயற்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பௌதீக செயல்முன்னேற்றம் 100 சதவீதமாகவும் நிதி செயல் முன்னேற்றம் 99.2 சதவீதமாகவும் இருந்தது.	செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பிரதிபலன்கள் இலக்கிடப்பட்ட நலன் பெறுனர்களுக்கு கிடைக்கின்றது என உறுதிப்படுத்தும் வகையில் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) வாழ்க்கைக்கு அர்த்தம் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் நலன்பெறுனர்களுக்கு முறைப்படியாக சரியான பெறுமதியிலும் போதியளவாகவும் கிடைக்கின்றதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான கையெழுத்துப் பதிவேடு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் சிறப்பான காரணங்களின் அடிப்படையில் சமூக எதிர்விவைகள்	நிகழ்சித்திட்டங்கள் தொடர்பாக உபகரணங்கள் மற்றும் பொருட்களை பகிர்ந்தளித்தல் சம்பந்தமாக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க செலவுப் பொழிப்பும் உபகரண்ஙகளை பகிர்ந்தளித்தல் விபரமும் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது.	செயற்திட்ட பிரதி பலன்கள் முறைப்படியாக நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்டன என்பதனை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் பேணப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் குறிக்கோள்களுக்கு பொருந்தும் வகையில் நலன்பெறுனர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இழக்கப்பட்ட பெண்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியாக வலுப்படுத்த வேண்டிய போதிலும் நலன் பெறுனர்களை தெரிவு செய்யும் போது பொருளாதாரத்தினை குறிப்பிட்ட மட்டத்திற்கு பேணிவருகின்ற மாதாந்தம் குறிப்பிடத்தக்க அளவு வருமானத்தை பெற்றுக்கொள்ளுகின்ற தொழில் முயற்சியாளர்களுக்காகவும் உதவிகள் வழஙகப்பட்டிருந்தன.		

4.3 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
சார்க் செயற்திட்டம் தொடர்பாக மீளாய்வாண்டின் போது 04 பிரதான செயற்பாடுகளின் கீழ் 08 உப செயற்பாடுகளுக்காக திறைசேரியிடமிருந்து ரூபா 14.45 மில்லியன் பணம் வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் 03 செயற்பாடுகள் எந்த நிதி செயற்திட்டத்தினையும் பெற்றிருக்காததுடன் இன்னும் 03 செயற்பாடுகளின் நிதி செயல்முன்னேற்றம் முறையே 1 சதவீதம் 2 சதவீதம் மற்றும் 5 சதவீதமாக இருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	வெளிநாட்டு கடன்/ மானியத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற செய்றதிட்டங்களின் நிதி உச்ச அளவு வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் மற்றும் பொருளாதார ரீதியாக உச்ச அளவு நலன்களை கொண்டதாகவும் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) பல்வேறு செயற்பாட்டு வர்ண லேசர் வகையான போட்டோ பிரதி செய்யும் இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்காக கேள்விதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பயன்படுத்தும் விபரங்களானது (Consumable details) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பொருள் விபரக் குறிப்பில் உள்ளடக்கப்பட்ட மாதிரியைச்	அமைச்சினால் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட இயந்திரத்தின் பொருள் விபரக் குறிப்பு ஆவணத்தில் வர்ண போட்டோ பிரதி இயந்திரமாக (Colour Laser Multifunction Photocopy Machine) தெளிவாக காட்டப்பட்டுள்ளது.	கிரய மதிப்பீட்டிற்குள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பொருள் விபர குறிப்பிற்கு இணங்க கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சார்ந்ததல்லாத மாதிரியான ஒரு இயந்திரம் ஆனதுடன் அதன் நிகழ்கால சந்தைப் பெறுமதி ரூபா 0.2 மில்லியனுக்கும் ரூபா 0.3 மில்லியனுக்கும இடைப்பட்ட விலையாக இருந்தும் 2024 நவம்பர் 12 ஆந் திகதி ரூபா 0.8 மில்லியன் வெட் வரியுடனான விலைக்கு அந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.	அதற்கிணங்க வர்ண போட்டோ பிரதி இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	பல்செயற்பாட்டு வர்ண லேசர் வகையான போட்டோ பிரதி இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்குரிய கேள்வி ஆவணங்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கை மற்றும் பெறுகை தீர்மானத்தினை பரீட்சித்த போது பெறுகை வழிகாட்டிக் கோவயின் 2.5 மற்றும் 2.6 ஆம் பந்திகளின் பிரகாரம் பெறுகை குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகளுக்காக பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தமது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக மிகவும் கவனமாக நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.	வழிகாட்டிக் கோவையின் 2.5 மற்றும் 2.6 ஆம் பந்திகளின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகை குழுக்களின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் முறைப்படியாக நிறைவேற்றப்படுகின்றன என்பதனை கணக்கீட்:டு உத்தியோகத்தரினால் பரீட்சித்துப் பார்த்து உரியவாறு எழுத்துமூல அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2015 யூன் 08 ஆந் திகதி வெள்ளத்தில் சிக்கியதனால் சேதமடைந்த ஜீப் வண்டிக்காக ரூபா 6.8 மில்லியன் செலவு செய்து திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் ரூபா 3.4 மில்லியன் மாத்திரம் நட்டயீடு வழங்கப்பட்டிருந்தது. காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்காத ரூபா 3.4 மில்லியன் மிகுதிப் பணம் 07 ஆண்டுகளின் பின்னர் அதாவது 2021	ஜீப் வாகனத்தின் நட்டம் தொடர்பாக மீண்டும் விசாரணை சபை நியமிக்கப்பட்டு நட்டத்தை பதிவழிப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க அமைச்சு செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலதிக நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.	கவனயீனத்தின் அடிப்படையில் இடம்பெற்ற நட்டத்தை அறவீடு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 103 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	திசெம்பர் 30 ஆந் திகதி அமைச்சினால் செலுத்தி 2022 சனவரி 13 ஆந் திகதி வாகனம் விடுவிக்கப்பட்டிருந்தது. விபத்து சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு உரிய சந்தர்ப்பத்தில் நடவடிக்கை எடுக்காமையால் நட்டத்திற்கு உத்தியோகத்தர்களின் தாமதம் காரணமாக இருந்தது என அமைச்சு குழுவின் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	2014 ஆம் ஆண்டின் போது ஜீப் வண்டி விபத்துக்கு உள்ளாகியமை சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104(4) இற்கு முரணாக 10 ஆண்டுகளின் பின்னர் அதாவது 2024 சனவரி 02 ஆந் திகதி முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் விபத்து சம்பந்தமாக போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வாகன பரிசோதகரின் அறிக்கையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காதது டன் நட்டயீடு சம்பந்தமாக எடுக்க வேண்டிய முறையான நடவடிக்கைகள் உரிய காலத்தில் எடுக்காமையின் காரணமாக இந்த நட்டத்தை மீள்மதிப்புச் செய்ய முடியாதிருந்ததுடன் 2024 திசெம்பர் 18 ஆந் திகதியளவிலும் வாகனம் துருப்பிடிக்கும் வகையில் பாதுகாப்பின்றி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நட்டத்தை மீளளிப்புச் செய்வதனை தவறவிட்டுள்ள உத்தியோகத்தரினை அடையாளங்கண்டு நிதிப்பிரமாணம் 103 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) ரூபா 98.9 மில்லியன் பெறுமதியான உலக வங்கி கடனின் கீழ் சமூக சேவை திணைக்களத்த்திற்குச் சொந்தமான ஒரு காணியில் ஊனமுற்றவர்களுக்கான சிறுவர் அபிவிருத்தி நிலையம் 2023 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்தும் உரிய காணி முறைப்படியாக பொறுப்பேற்கப்படாமையின் காரணமாக மின்சாரம் மற்றும் நீரினை இந்த நிலையத்திற்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதற்கிணங்க 2023 யூன் 14 ஆந் திகதியிலிருந்து 2025 ஏப்ரல் 11 ஆந் திகதி வரை இந்த நிலையம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில் லை. மேலும் கூரையினால் நீர் கசிவதன் காரணமாக சில சுவர்களும் உட்கூரையின் ஒரு பகுதியும் நிறமாற்றம் ஏற்பட்டுள்ளதனால் கட்டிடம் சிதைவடையும் ஆபத்து காணப்பட்டிருந்ததுடன் கட்டிட வளவுக்கான நுழைவுப் பாதையும் மிகவும் உடைந்த நிலையில் காணப்பட்டது.	2018 மே 10 ஆந் திகதிய அமைப/18/0755/711/015 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் தென் மாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையம் அகுரஸ்ஸ புப்புலவத்த பிரதேசத்தில் உலக வங்கியின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டது. முறைப்படியாக பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்ததன் பின்னர் நிறமாற்றம் ஏற்பட்டுள்ள கூரை மற்றும் சுவரினை திருத்தம் செய்து இதில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.	கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என உறுதிப்படுத்திக்கொண்டு நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நட்டம் மற்றும் சேதம் ஏற்பட்ட 03 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 5.6 மில்லியன் பெறுமதியை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	துரிதமாக நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.7 கடமைகள் நிறைவேற்றப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	இலங்கை மகளிர் சாசனத்தின் 17(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 15 குழு அங்கத்தவர்களைக் கொண்ட தேசிய மகளிர் குழு இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது தேவைக்கேற்ப முடியுமான அளவிற்கு தொடர்ச்சியாக கூட்டத்தை நடாத்த வேண்டிய போதிலும் 2½ ஆண்டுகளாக கூட்டம் நடாத்தப்படாதிருந்ததுடன் சாசனம் தொடர்பாக செயற்பாட்டுக் குழு அங்கத்தவர்கள் நியமிக்கப்படாததன் காரணமாக செயற்பாட்டு குழுவின் மேற்பார்வையில் உப குழுக்களின் கூட்டங்களும் நடாத்தப்படவில்லை.	உரிய நிறைவேற்றுத் தலைவர் சனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டியதுடன் அது இதுவரை நியமிக்கப்படவில்லை.	இலங்கை மகளிர் சாசனத்தின் 17(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் தேசிய மகளிர் குழுவினை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பாரம்பரிய கைத்தொழிலில் ஈடுபவர்கள், சுயதொழிலில் ஈடுபடுகின்ற குறைந்த வருமானம் பெறுபவர்கள், உற்பத்தி வருமானம் இல்லாத மற்றும் சந்தையை தேடிக்கண்டு கொள்ள முடியாத சிறிய தொழில் முயற்சியாளர்களை உற்பத்தியின் பிரதான பங்குதாரர்களாக்கி தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் வாழுகின்ற குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்தும் வகையில் 2021 ஆம் ஆண்டில் சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்களை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை புதிய உற்பத்திக் கிராமங்கள் மற்றும் காணப்படுகின்ற உற்பத்திக் கிராமங்களை மேம்படுத்துவதற்காக ரூபா	அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்கிறேன். உற்பத்திக் கிராமங்களின் தரவுகளைப் பெற்று பொருத்தமான வகையில் ஒரு தரவு முறைமையினை தயாரிப்பதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.	தரவு முறைமையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	2,563.89 மில்லியன் ஒட்டுமொத்த செலவு இலங்கை மகளிர் பணியகத்தின் மூலம் செலவு செய்யப்பட்டிருந்தும் அக்கிராமங்கள் தொடர்பான தரவு முறைமை நாளதுவரையாக்கப்படவில்லை.		
(இ)	2021 ஆம் ஆண்டில் 602 நலன்பெறுனர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட 11 செயற்திட்டங்கள் 2025 ஏப்ரல் 09 ஆந் திகதியளவில் முழுமையாக செயற்பாடற்றுக் காணப்பட்டன.	அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்படுகின்றது.	செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பிரதிபலன்கள் நலன் பெறுனர்களுக்கு கிடைக்கும் வகையில் செயற்திட்டத்தினை செயற்படும் நிலையில் தொடர்ச்சியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2024 ஆம் ஆண்டில் 45 புதிய உற்பத்திக் கிராமங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் 16 கிராமங்கள் அதாவது புதிய செயற்திட்டத்தில் 33 சதவீதம் அளவானவை களுத்துறை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 08 செயற்திட்டங்கள் ஒரே பிரதேச செயலகத்திற்கு (மதுகம) வழங்கப்பட்டிருந்தது.	அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்கிறேன். இந்த 08 செயற்திட்டங்களையும் வெற்றிகரமாக மேற்கொள்ளும் நோக்கத்தில் 400 நலன் பெறுனர்களுக்கு கருவா நாற்றுக்களை வழங்குவதற்காக ரூபா 11.15 மில்லியன் நிதி எற்பாட்டு பணம் செலவு செய்யப்பட்டது. தற்பொழுது நலன்பெறுனர்களின் எண்ணிக்கையை 591 வரை அதிகரிக்கச் செய்து இந்த 08 செயற்திட்டங்களும் வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது.	செயற்திட்டத்தின் மூலம் பிரதிபலன்களை எதிர்பார்க்கின்ற நலன் பெறுனர்கள் இரக்கும் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் திட்டமிட்டு அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.